
**செப்டம்பர் - 01**

# TNPSC துளிகள்

- உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியான ஏ. ஆர். லட்சுமணன் அவர்கள் சமீபத்தில் காலமானார்.
  - தற்பொழுது இவர் நீதியரசர் ஏ.எஸ். ஆனந்த் அவர்களால் தலைமை தாங்கப் படும் முல்லைப் பெரியார் குழுவில் தமிழ்நாட்டின் பிரதிநிதியாக உள்ளார்.
- இந்திய இரயில்வேயானது 2030 ஆம் ஆண்டிற்குள் 33 பில்லியன் அலகுகளை உள்ளடக்கிய தனது ஆற்றல் நுகர்வை அடைய உள்ளது.
  - இந்திய இரயில்வேயின் தற்போதைய வருடாந்திர ஆற்றல் தேவையானது ஏறத்தாழ 21 பில்லியன் அலகுகளாக உள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## இடஒதுக்கீட்டுப் பிரிவுகளில் துணைப் பிரிவுகள்




- தங்களது சமூகத்திற்குள்ளேயே தாழ்த்தப்பட்டவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பயன்களை அளிப்பதற்காக மாநிலங்களே பட்டியலிடப்பட்ட வகுப்பினர், சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய வகுப்பினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினரைத் துணைப் பிரிவுகளாக வகைப்படுத்தலாம் என்று இந்திய உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- இது பட்டியலிடப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள 18% இடஒதுக்கீட்டிற்கு உள்ளேயே 3% இடஒதுக்கீட்டை அளிக்க வழிவகை செய்யும் தமிழ்நாடு அருந்ததியர்கள் சட்டம், 2009 என்ற சட்டமானது தொடர்ந்து செயல்பாட்டில் இருக்கும் என்பதைக் குறிக்கும்.
- இந்த அமர்வானது இந்திய உச்சநீதிமன்றத்தின் 2004 ஆம் ஆண்டுத் தீர்ப்பான E.V.

சின்னய்யா எதிர் ஆந்திரப் பிரதேச மாநிலம் என்பதிலிருந்து வேறுபட்டு கருத்து கூறியுள்ளது.

- 2009 ஆம் ஆண்டில் கருணாநிதி தலைமையிலான தமிழ்நாடு மாநில அரசானது பட்டியலிடப்பட்ட வகுப்பினர் பிரிவில் உள்ள 74 பிரிவினர் கொண்ட பட்டியலில் 7 வகுப்பினரை ஒன்றிணைத்து அச்சமூகத்திற்கு சிறப்பு இடஒதுக்கீட்டை அறிமுகப் படுத்தியது.
- இந்த உள் இடஒதுக்கீடானது நீதியரசர் ஜனார்த்தனன் தலைமையிலான ஆணையத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ஓர் அறிக்கையின் அடிப்படையில் வழங்கப் பட்டுள்ளது.


# தேசியச் செய்திகள்

## NFSA 2013-ன் கீழ் மாற்றுத் திறனாளிகள்

- மத்திய அரசானது அனைத்து மாற்றுத் திறனாளிகளும் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் (NFSA - National Food Security Act), 2013 என்ற சட்டத்தில் இணைக்கப்பட வேண்டும் என்று மாநில அரசுகள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு உத்தரவிட்டுள்ளது.
- ஆத்ம நிர்பர் பாரத் அபியான் திட்டத்தின் பயன்கள் NFSA சட்டம் அல்லது மாநிலங்களின் பொது விநியோக அமைப்பு ஆகியவற்றின் கீழ் உள்ளடங்காதவர்களுக்கு வழங்கப் படுகின்றது.
- தற்பொழுது குடும்ப அட்டை இல்லாத மாற்றுத் திறனாளிகள் ஆத்ம நிர்பர் பாரத் அபியான் திட்டத்தின் பயன்களைப் பெறத் தகுதியுடையவர்களாவர்.

## உடான் திட்டத்தின்கீழ் புதிய 78 வழித் தடங்கள்

- மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகமானது பிராந்திய இணைப்புத் திட்டத்தின் 4வது சுற்றின் கீழ் 78 புதிய வழித் தடங்களுக்கு ஒப்புதல் வழங்கி உள்ளது.
- இதுவரை 766 புதிய வழித் தடங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளன.
- UDAN திட்டத்தின் 4வது சுற்றானது வட கிழக்குப் பகுதிகள், தீவுகள் மற்றும் மலைப் பிரதேசங்கள் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தும் வகையில் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தொடங்கப்பட்டது.
- UDAN திட்டமானது 2016 ஆம் ஆண்டு மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகத்தின் கீழ் தொடங்கப் பட்டுள்ளது.




## NDC - ஆசியாவிற்கான போக்குவரத்து முன்னெடுப்பு

- நிதி ஆயோக்கானது நாடு தழுவிய நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் (NDC - Nationally Determined Contributions) ஆசியாவிற்கான போக்குவரத்து முன்னெடுப்பின் (TIA - Transport Initiative for Asia) "இந்தியக் கூறை" (India Component) வெளியிட்டுள்ளது.
- இது இந்தியா, வியட்நாம் மற்றும் சீனாவில் கடர்க்கரி நீக்கல் முறையிலான போக்குவரத்திற்கான (decarbonize transport) ஒரு விரிவான அணுகுமுறையை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு பிராந்திய முன்னெடுப்பாகும்.
- ஒவ்வொரு பங்காளர் நாடுகளிலும், NDC-TIA ஆனது பாரீஸ் ஒப்பந்தத்தின் NDC-ன் இலக்குகளை அடைய அதன் துறைசார் பங்களிப்புகளை ஏற்படுத்த உதவ இருக்கின்றது.
- NDC-TIA ஆனது 4 ஆண்டு கால அளவில் ஒரு செயல்திட்டத்தைக் கொண்டுள்ளது.

## பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா


- 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28 அன்று தொடங்கப்பட்ட பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனாவின் (PMJDY - Pradhan Mantri Jan Dhan Yojna) 6வது ஆண்டாவது தற்பொழுது அனுசரிக்கப் பட்டது.
- PMJDY-ன் நோக்கம் வங்கியல் சேமிப்பு வைப்புக் கணக்குகள், பணம் அனுப்புதல் (தாய் நாட்டிற்கு), கடன், காப்பீடு, எளிய முறையில் ஓய்வூதியம் வழங்குதல் போன்ற நிதியியல் சேவைகளை அணுகுவதை உறுதி செய்வதாகும்.
- PMJDY-ன் முழக்கம், "மேரா காட்டா - பாக்யா விதாத்தா" என்பதாகும்.
- பின்னர் இது "ஒவ்வொரு குடும்பம்" என்ற நிலையிலிருந்து "வங்கிச் சேவை பெறாத அனைத்துப் பதின்மர்" என்ற நிலையின் மீது கவனம் செலுத்துகின்றது.

- இது மத்திய நிதித் துறை அமைச்சகத்தின் கீழ் நிதியியல் சேவைத் துறையினால் செயல்படுத்தப் படுகின்றது.
- கைபேசிச் செயலியான ஜன் தன் தர்ஷக் என்ற ஒரு செயலியானது வங்கிக் கிளைகள், ஏடிஎம்கள் போன்ற வங்கிச் சேவை இடங்களைக் காண்பிப்பதற்கான குடிமக்களை மையமாகக் கொண்ட ஒரு தளத்தை அளிப்பதற்காகத் தொடங்கப் பட்டு உள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## ஜப்பான் பிரதமரின் பதவி விலகல்

- ஜப்பான் பிரதமரான ஷின்சோ அபே தனது உடல் நிலையின் காரணமாகத் தனது பதவி விலகலை அறிவித்துள்ளார்.
- ஜப்பானில் நீண்ட காலமாக பிரதமராக (2006-2021) பணியாற்றியவர் இவராவார்.




# பொருளாதாரச் செய்திகள்

## இந்திய ரிசர்வ் வங்கியின் வருடாந்திர அறிக்கை 2019-20

- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI - Reserve Bank of India) தனது வருடாந்திர அறிக்கை 2019-20 என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, 2019-20 ஆம் ஆண்டில் மொத்த வருவாயானது 28.97% என்ற அளவில் அதிகரித்துள்ளது.

*முக்கியத் தரவுகள்*

- RBIயின் இருப்பு நிலையானது 13.42% என்ற அளவில் அதிகரித்துள்ளது.

- 2018-19 ஆம் ஆண்டில் அதன் மொத்த வருவாயானது ரூ.1,49,672 ஆக இருந்தது.
- இது 2019-20 ஆம் ஆண்டில் 1,93,036 ஆக உள்ளது.
- அதன் செலவினமானது 39.72% என்ற அளவில் குறைந்துள்ளது.
- வங்கியின் வட்டி வருவாயானது 44.62% ஆக அதிகரித்துள்ளது.
- அரசுப் பங்குகளில் RBIயின் இருப்பு நிலையானது 57.19% ஆக அதிகரித்துள்ளது.
- வங்கி மோசடி வழக்குகளின் மதிப்பானது 74% ஆக அதிகரித்துள்ளது.
- வங்கி மோசடி வழக்குகளின் எண்ணிக்கையானது 2019 ஆம் ஆண்டில் 6800 ஆக அதிகரித்துள்ளது. இது 2018 ஆம் ஆண்டில் 5900 ஆக இருந்தது.
- வங்கி அமைப்பின் நிகர வாராக் கடன் விகிதமானது 9.1% ஆகக் குறைந்துள்ளது. இது 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 11.2% ஆக இருந்தது.
- தற்போது புழக்கத்தில் உள்ள பணமானது 17% ஆக அதிகரித்துள்ளது.
- இது 2019-20 ஆம் ஆண்டில் ரூ. 21.10 டிரில்லியன் ஆக இருந்தது.
- 2019 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரை, RBI ஆனது 618.16 மெட்ரிக் டன் தங்கத்தை கையிருப்பில் வைத்துள்ளது. இது 2018 ஆம் ஆண்டில் 566,23 டன்களாக இருந்தது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## சில்லேறு நதியில் பெளி மீன் (Mahseer Fish)

- சமீபத்தில் “பெளி மீன்” எனப்படும் ஓர் அரிய வகை மீன் இனமானது சில்லேறு நதியில் காணப்பட்டுள்ளது.
- இந்த மீன் இனமானது பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் (IUCN - International Union for Conservation of Nature) சிவப்பு நிறப் பட்டியலில் அருகி வரும் இனமாகப் பட்டியலிடப் பட்டுள்ளது.
- பெளி மீன் ஆனது குளிர் பிராந்தியப் பகுதிகளில் பாயும் இமயமலை நதிகளில் காணப் படுகின்றது.
- இது இமாச்சலப் பிரதேசம், உத்தரகண்ட், பூடான், நேபாளம் ஆகியவற்றில் காணப் படுகின்றது.
- இது ஒரு மிகப்பெரிய நன்னீர் வகை மீனாகும்.
- உலகில் 47 வகை பெளி மீன் இனங்கள் உள்ளன.
- இதில் 15 இனங்கள் இந்தியாவில் காணப்படுகின்றன.
- சமீபத்தில் 2019 ஆம் ஆண்டில், IUCN ஆனது கூன்முதுகு பெளி மீனின் நிலையை மிகவும் அருகி வரும் இனமாகப் பட்டியலிட்டுள்ளது.
- இது இந்தியாவில் காவிரி நதியில் மட்டும் காணப்படுகின்றது. இது உலகில் வேறு

எங்கும் காணப்படுவதில்லை.

# மாநிலச் செய்திகள்

## 6வது அட்டவணையில் இணைக்கப் படுவதற்கான தீர்மானம்

- ஆகஸ்ட் 27 அன்று அருணாச்சலப் பிரதேச மாநில சட்டசபையானது இந்திய அரசியலமைப்பின் 6வது அட்டவணையில் அந்த மாநிலம் இணைக்கப் படுவதற்குத் தேவையான தீர்மானம் ஒன்றை ஒருமனதாக நிறைவேற்றியுள்ளது.
- 6வது அட்டவணையானது வடகிழக்கில் பழங்குடியினரின் உரிமைகளுக்குப் பாதுகாப்பை அளிக்கின்றது.
- 6வது அட்டவணையானது பழங்குடியினச் சமூகத்தினருக்குத் தேவையான தன்னாட்சியை வழங்குவதுடன் அம்மாநிலத்தின் நிலப் பாதுகாப்பிற்கு தேவையானச் சட்டங்களை இயற்றுவதற்கு அந்த ஆணையத்திற்கு வேண்டிய அதிகாரங்களை வழங்குகின்றது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★